IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.148/2022

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MOORTHY |
| FATHER'S NAME | : | SETTU |
| VILLAGE | : | LAKSHMIPURAM |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது லட்சுமிபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 ஆவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் காட்பாடி காவல் நிலையம் அருகே போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசார்கக்வில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.05.2025 ம் தேதி நானும் எனது பகுதியை சேர்நத இம்தியாஸட எனடபவரும் காலை 11.00 மணிக்கு வேலூர் விஜடி சூர்யா பாஸ்ட்புட் அருகே நின்று கொண்டிருந்த போது அப்போது காட்பாடி போலிசார் லாட்டடிரி விற்பனை செய்து கொண்டிருந்தது தொடர்பாக எதிரி ஜெயச்சந்திரன் என்பவரை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், எதிரி எங்கள் முன்பா ெ எகாடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும், அதில் நானும் இம்தியாஸ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட DR 27 MANI 150 வரிசையில் 5 சீட்டுகளும், DR83 குமரன் 200 என்ற வரிசையில் 17 லாட்டரி சீட்டுகளும், DR83 DEAR 50 என்ற வரிசையில் 11 சீட்டுகளும் DR 83 KUYIL என்ற வரிசையில் 29 லாட்டரி சீட்டுகளும், VISHNU 250, 34 லாட்டரி சீட்டுகளும், சுவர்ண லட்சுமி என்ற பெயரில் 10 சீட்டுகளும், தங்கம் என்ற பெயரில் 34 லாட்டரி சீட்டுகளும், நலல நேரம் என்ற பெயரில் 27 லாட்டரி சீட்டுகளும், ROSA என்ற பெயரில் 30 லாட்டரி சீட்டுகளும் ஆக மொத்தம் 207 லாட்டரி சீட்டுகளை பணம் ரூபாய் 4400 மற்றும் ரிசல்ட் பேப்பர் 7 ஆகியவற்றை கைப்பற்றுதல்

மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும் இம்தியாஸ் என்பவரும் சாட்சியமாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.